# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 09 திங்கட்கிழமை 23.08.2025 கதிர் 296









## செம்மணிப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை வேண்டி வடக்கு, கிழக்கில் 29 ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம்

### யாழ்ப்பாணத்தில் இன்று தமிழ்க் கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 25

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச விசாரணை கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 29ஆம் திகதி கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இன்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக்

7➤

# இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றுக!

## பருத்தித்துறையில் பெரும் போராட்டம்







பருத்தித்துறை, ஒக. 25


யாழ். பருத்தித்துறையில் அமைந்துள்ள சில இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி இன்று காலை மாபெரும் போராட்டம் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகர பிதா டக்ளஸ் போல் தலைமையில் 'பருத்தித்துறை நகரைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இருந்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று மகஜர் கையளிக்கப்பட்டது.

7➤

### புதுக்குடியிருப்பில் குளவி கொட்டி மூவர் அவசர சிகிச்சைப் பிரிவில்



புதுக்குடியிருப்பு, ஒக. 25

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணைப்பாலைப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய மூவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில்

### காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் 30ஆம் திகதி போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக. 25

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் மாபெரும் போராட்டம் ஏற்பாடு செய்யப்படுள்ளது

7➤

### இத்தாவில் விபத்தில் ஆசிரியை படுகாயம்




பளை, ஒக. 25

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் மறுகரைக்குத் திரும்பிய மற்றுமொரு மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த 50 வயது ஆசிரியை படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் இன்று

7➤



### நல்லூர் தேருக்கு விடுமுறை: வரும் சனி பதில் பாடசாலை

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்வரும் சனிக்கிழமை இயங்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டுக் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

7➤



## ரணிலின் கைது நடவடிக்கை அரசியல் ரீதியானது

கொழும்பு, ஓக .25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட நடவடிக்கை அரசியல் ரீதியானது என பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார். இலங்கையில் உயர்நிலை பிரபுக்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தல் அல்லது நடைமுறைப்படுத்தாதிருத்தல் இரண்டுமே அரசியல் ரீதியான தீர்மானங்களின் அடிப்படையிலானது என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை ஆடை இதனை மூடிமறைக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த செயன்முறையும் அரசியல் ரீதியானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிணை வழங்கும் நடவடிக்கைகளில் சட்ட மா அதிபர் திணைக்களம் தலையீடு செய்வதாகவும் அது அரசாங்கத்தின் அரசியல் தலையீடாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிரான ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் அரசியல் தலையீடு இன்றி மேற்கொள்ளப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக ஊடகத்தில் அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பேராசிரியர் நிர்மால் ரஞ்சித்தெவ்சிறி தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சி பீடம் ஏற்றுவதில் முனைப்புடன் செயற்பட்டவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பதிவு செய்ய விரும்பும் அரசியல் கட்சிகளுக்கு இரண்டாம் சுற்று நேர்காணல்

கொழும்பு, ஓக .25

இந்த ஆண்டு பதிவு செய்ய விரும்பும் புதிய அரசியல் கட்சிகள் இந்த மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படும் இரண்டாவது சுற்று நேர்காணல்களுக்கு உட்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

ஐந்து பேர் கொண்ட குழு இது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டுக்கான புதிய அரசியல் கட்சிகளின் பதிவு பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பித்தது.

மார்ச் 28 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த வருடாந்த செயல்முறை தாமதமானது.

இந்தநிலையில், தேர்தல் ஆணையகம் 83 விண்ணப்பங்களைப் பெற்றதாக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவற்றில், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாததற்காக 36 நிராகரிக்கப்பட்டன. இதனடிப்படையில் 47 விண்ணப்பங்கள் முறையான மதிப்பீட்டு நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ரணிலின் கைதினை அடுத்து விகாரையில் தஞ்சம் புகுந்துள்ள அரசியல்வாதிகள்

கொழும்பு, ஓக .25

தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆசி வேண்டி கொள்ளுப்பிட்டி வாலுகாராம விகாரையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

நேற்று பிற்பகல் இந்த பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரச நிதியை தவறாக பயன்படுத்தியதாகத் தெரிவித்து சிஐடியினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அவரது உடல்நிலைக் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், ரணிலின் கைதுக்கு ஆதரவாகவும், எதிராகவும் அரசியல் பரப்பில் பல்வேறு கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆசிவேண்டி ஐக்கிய தேசியக் கட்சியினர் பூஜை வழிபாடுகளை முன்னெடுத்துள்ளனர். இதன்படி, கொள்ளுப்பிட்டி விகாரையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் பெருமளவான ஐ.தே.கவினர் மற்றும் ரணில் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர். (ஐ)





# ரணில் விக்ரமசிங்க விளக்கமறியலில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவு தொடர்பில் நாமல் விளக்கம்



கொழும்பு, ஓக .25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்திருப்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

முன்னாள் ஜனாதிபதியின் கைது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லையா? அதன்மூலமே சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்திருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாங்கள் ஒன்று சேருவதற்கு யாரும் சிறை செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். அவர்கள் ஒன்று சேருவதற்கு தான் போராட்டம் வேண்டும்.

அவர்கள் ஒன்று சேருவதற்கு தீவைக்க வேண்டும். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தற்போது செயற்படுவது தங்களது கட்சிகளின் சுயநலனுக்காக அல்ல.

மாறாக நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கு ஆகும். அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என சொல்லப்படுவது போல நண்பர் யார்? எதிரி யார்? என்பதை நினைத்துப்பார்க்க முடியாது.

2005 ஆம் ஆண்டில் நாம் ஜே.வி.பியின் நண்பர்கள், 2015 இல் ரணில் ஜே.வி.பியின் நண்பர், 2022 இல் நாம் ரணிலின் நண்பர், 2025 இல் ரணில் ஜே.வி.பிக்கு எதிரியாகியுள்ளார். மக்களே யார் நண்பர்? யார் பகைவர் என்ற குழப்பத்தில் உள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ஐ)

## உண்மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்துங்கள்



*கொழும்பு, ஓக .25*

*முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் அமைதித் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.*

*அத்துடன் முன்னாள் ஜனாதிபதியை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தமது எக்ஸ் கணக்கில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.*

*2022 ஆம் ஆண்டில் நாடு பொருளாதார மற்றும் அரசியல் குழப்பம் அடைந்தபோது இலங்கையைக் காப்பாற்ற முன்வந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுதியற்றவை.*

*அவை உண்மையாக இருந்தாலும், ஐரோப்பாவில் அவை எந்தவொரு குற்றமாகவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையையும் கொண்டிருக்காது.*

*ஊழலுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு நான் முழு ஆதரவை வழங்குகிறேன்,*

*ஆனால் தயவு செய்து உண்மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்துங்கள் என்று எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்.* *(ஐ)*



## ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான மிகவும் விலையுயர்ந்த இடமாகக் காணப்படும் இலங்கை

கொழும்பு, ஓக .25

இலங்கையின் ஆடை உற்பத்திகளுக்கு இங்கிலாந்திற்குள் வரிகள் பூஜ்ஜியமாக இருந்தாலும் உலகளாவிய ரீதியில் ஆடைகளை உற்பத்தி செய்வதற்கான மிகவும் விலையுயர்ந்த இடமாக இலங்கை தனித்து நிற்பதாக சந்தை தரப்புக்கள் தெரிவித்துள்ளன. தற்போதைய நிலையில் பங்காளதேஸ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் இலங்கையை விட குறைந்த உற்பத்தி செலவுகளில் ஆடைகளை உற்பத்தி செய்கின்றன.

எனவே இது இலங்கையை மற்ற சந்தைகளுடன் போட்டித்தன்மைக்கு உட்படுத்தியுள்ளதாக கூட்டு ஆடை சங்க மன்றத்தின் செய்தி பேச்சாளர் யோஹான் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை உட்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் தாராளமயமாக்கப்பட்ட விதிகளை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

இது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தின் இந்த சீர்திருத்தம், இலங்கை உற்பத்தியாளர்களுக்கு இங்கிலாந்து சந்தைக்குள் வரி இல்லாத அணுகலை தொடர்ந்தும் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தற்போது நாட்டின் வருமானம் அதிகரித்து உள்ளது!

கொழும்பு, ஓக .25

மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த அமைச்சர், கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் க இளங்குமரன் ஆகியோருடன் கூட்டாக ஊடக சந்திப்பினை நடத்தி இருந்தார். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அவை வடக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்காக எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி, மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதனை தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் கடவுசீட்டு, அலுவலகத்தை திறந்து வைத்து, கடவுசீட்டு வழங்கும் பணிகளை ஆரம்பித்து வைப்பார்.

பின்னர் மயிலிட்டி துறைமுகத்திற்கு விஜயம் செய்து, துறைமுக அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் செய்து , நூலகத்தை பார்வையிடவுள்ளதுடன், சில நூல்களையும் அன்பளிப்பு செய்யவுள்ளார்.

மறுநாள் 02 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து, வட்டுவாகல் பால புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் தென்னை முக்கோண வலய செயற்திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

எமது அரசாங்கம் வடக்கு கிழக்கை முன்னிலைப்படுத்தி வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தற்போது நாட்டின் வருமானம் அதிகரித்து உள்ளது. அதனால் எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் அபிவிருத்திக்காக அதிகளவான நிதிகளை ஒதுக்கீடு செய்யப்படும். அதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தியே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். (ஐ)

# பொது சுகாதாரத் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்படுகிறது

பொது சுகாதாரத் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் ஒன்றிய அரசு செயல்படுகிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றசாட்டு வைத்துள்ளார். அனைத்து மாநிலங்களின் சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்வதில் ஒன்றிய அரசு தவறிவிட்டது.

அனைத்து தரப்பு மக்களின் நலன்களை காக்கும் வகையில் தமிழ்நாட்டில் பொது சுகாதாரத் திட்டம் உள்ளது. தனியார் கல்லூரிகள் அதிக கட்டணம் வசூலிப்பதை ஒன்றிய அரசின் என்.எம்.சி. சட்டம் அனுமதிக்கிறது. ஒன்றிய அரசின் என்.எம்.சி. சட்டம், கல்வியை வணிகமயமாக்க தூண்டுகிறது.

நீட், நெக்ஸ்ட் போன்ற நுழைவுத் தேர்வுகள் சமூக நீதிக் கொள்கைகளுக்கு எதிராக உள்ளது. நீட், நெக்ஸ்ட் போன்ற நுழைவுத் தேர்வுகளால் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீட், நெக்ஸ்ட் போன்ற நுழைவுத் தேர்வுகள் மூலமாகவும் ஒன்றிய அரசிடம் அதிகாரம் குவிக்கப்படுகிறது. "அனைத்து மாநிலங்களும் தங்களது சுகாதார இலக்குகளை அடைய ஒன்றிய அரசு உதவி செய்ய வேண்டும். (ஐ)





## ஆதாரை மட்டுமே வைத்து வாக்காளராக முடியாது

பீகாரில் தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் 65 லட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், நீக்கப்பட்ட வாக்காளர்கள் மற்ற ஆவணங்களுடன் ஆதாரையும் சமர்பிக்கலாம் என உத்தரவிட்டுள்ளது. இது குறித்து பாஜ தகவல் தொழில்நுட்ப துறை தலைவர் அமித் மால்வியா நேற்று கூறியதாவது:

ஆதார் என்பது அடையாளம் மற்றும் வசிப்பிடத்திற்கான சான்று மட்டுமே, அது குடியுரிமையை நிர்ணயம் செய்யாது என ஆதார் சட்டம் சொல்கிறது. எனவே, வாக்காளர் சேர்க்கைக்கான ஆவணமாக ஆதாரை சேர்க்க தேர்தல் ஆணையத்திடம் முறையிடுவது மக்கள் பிரதிநிதித்துவத சட்டம் பிரிவு 16 மற்றும் ஆதார் சட்டத்தை அர்த்தமற்றதாக்கும். ஆதார் ஒருவரின் குடியுரிமையை நிரூபிக்க சட்டபூர்வ ஆவணம் அல்ல என உச்ச நீதிமன்றமும் கூறியிருக்கிறது.

உச்ச நீதிமன்ற உத்தரவில், ஆதார் மட்டுமே வாக்குரிமையை பெறுவதற்கான அதிகாரப்பூர்வ ஆவணம் என கூறவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் அவ்வாறு பிரசாரம் செய்கின்றன. ஆதாரை மட்டும் வைத்து வாக்காளராக பதிவு செய்ய முடியாது. இறந்தவர்கள், போலிகள், வங்கதேசம் மற்றும் ரோஹிங்கியாக்கள் பெயர்கள் நீக்கப்படும். இந்திய குடிமக்கள் மட்டுமே அடுத்த அரசை தேர்ந்தெடுப்பார்கள், வெளிநாட்டவர்கள் அல்ல. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## அரசியல் ஆதாயத்துக்காக நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் தடுப்பது நல்லதல்ல



அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு டெல்லியில் நேற்று நடந்தது. 2 நாள் நடக்கும் மாநாட்டை தொடங்கி வைத்து ஒன்றிய அமைச்சர் அமித் ஷா பேசியதாவது: நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் விவாதங்களுக்கான இடங்கள். ஆனால் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கட்சிகள் அவற்றை செயல்பட விடாமல் தடுப்பது நல்லதல்ல. நாடாளுமன்றத்தில் குறைந்த அளவிலான விவாதங்கள் நடக்கும்போது, தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அவையின் பங்களிப்பு பாதிக்கப்படும்.

ஜனநாயகத்தில் விவாதம் நடைபெற வேண்டும். ஆனால், ஒருவரின் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கட்சி என்ற பெயரில் அவை செயல்பட அனுமதிக்கப்படாவிட்டால் அது நல்லதல்ல. எதிர்க்கட்சி என்ற பெயரில், சபையை தினமும் அல்லது ஒவ்வொரு கூட்டத்தொடரையும் செயல்பட அனுமதிக்காவிட்டால் அது நல்ல செயல் அல்ல. நாட்டு மக்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றார். (ஐ)

## ரூ.35 லட்சம் வரதட்சணை கேட்டு மனைவியை உயிருடன் எரித்து கொன்ற கொடூர கணவன்





உத்தரப்பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள சிர்சா கிராமத்தை சேர்ந்தவர் விபின். இவரது மனைவி நிக்கி (28). கடந்த 2016ம் ஆண்டில் இவர்களுக்கு திருமணமாகி 6 வயதில் மகன் உள்ளார். நிக்கியின் மூத்த சகோதரி காஞ்சன். இவர், விபினின் மூத்த சகோதரர் ரோகித்தை மணந்துள்ளார்.

ஒரே குடும்பத்தில் மருமகள்களாக சென்ற சகோதரிகளுக்கு புகுந்த வீட்டில் பல கொடுமைகள் நடந்துள்ளது. நிக்கி திருமணத்தின் போது அவரது தந்தை வரதட்சணையாக உயர்ரக எஸ்யுவி கார், புல்லட் பைக், தங்கம், ரொக்கம் கொடுத்துள்ளார்.

ஒவ்வொரு கர்வா சாத் பண்டிகையின் போதும் ஏராளமான பரிசுப் பொருட்களை தந்துள்ளார். ஆனால், கணவன் விபினும், மாமியாரும் கூடுதல் வரதட்சணை கேட்டு நிக்கியை கொடுமைபடுத்தினர். நிக்கி பியூட்டி பார்லர் வைத்து குடும்பத்தை நடத்திய நிலையில் அதில் கிடைக்கும் அத்தனை பணத்தையும் கேட்டு மாமியார் சித்ரவதை செய்துள்ளார். மேலும், விபின், ரோகித் இருவருக்குமே வேறு பெண்களுடன் பழக்கம் இருப்பதால் அதைக் கேட்ட மனைவிகளை அடித்து துன்புறுத்தி உள்ளனர்.

இந்நிலையில், மேற்கொண்டு ரூ.35 லட்சம் வரதட்சணை கேட்டு விபினும், அவரது தாயாரும் சேர்ந்து நிக்கியை கடந்த 21ம் தேதி வீட்டில் வைத்து அடித்து சித்ரவதை செய்துள்ளனர். இது நிக்கியின் சகோதரி காஞ்சன் மற்றும் 6 வயது மகன் கண்முன்னே நடந்துள்ளது. அங்கு நடப்பதை காஞ்சன் தனது செல்போனில் வீடியோ பதிவு செய்துள்ளார். நிக்கியின் தலைமுடியை பிடித்து மாடி படிக்கட்டில் தரதரவென இழுத்து வந்த அவரது கணவன், உடலில் மண்ணெண்ணெய் போன்ற திரவத்தை ஊற்றி தீவைத்துள்ளான்.

இதனால் உடலில் தீப்பற்றியதும் நிக்கி அலறித் துடித்தார். பலத்த தீக்காயத்துடன் டெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிக்கி சிகிச்சை பலனின்றி இறந்தார். இது குறித்து நிக்கி குடும்பத்தினர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விபினை கைது செய்தனர். தலைமறைவான அவரது தந்தை, தாய் மற்றும் சகோதரனை தேடினர்.

இதற்கிடையே, நேற்று மதியம் விபினை அவரது வீட்டிற்கு போலீசார் அழைத்து வந்த போது, போலீசாரின் துப்பாக்கியை பறித்துக் கொண்டு விபின் தப்பிக்க முயன்றார். உடனடியாக அவரை விரட்டிய போலீசார் காலில் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர். மேலும், கஸ்னா பகுதியில் பதுங்கியிருந்த மாமியாரை போலீசார் நேற்று கைது செய்தனர். நிக்கியை எரித்து கொல்லும் கொடூரமான வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவி வைரலாகி உள்ளன.

மனைவியை கொன்றதும் தன்னை காப்பாற்றிக் கொள்ள விபின் சமூக ஊடகத்தில் சோகமான பதிவு ஒன்றை வெளியிட்டார். அதுமட்டுமின்றி கைதான பிறகும் அவர் மனம் வருந்தாமல், "நான் எதுவும் செய்யவில்லை. என் மனைவி தான் தற்கொலை செய்து கொண்டார்.


கணவன், மனைவிக்குள் சண்டை இருப்பது சகஜம்தானே?" என கூறி உள்ளார். ஆனால் இவர்களது 6 வயது மகன் தனது தாய்க்கு நடந்த கொடூரத்தை போலீசாரிடம் கூறி உள்ளார். இந்த வீடியோவை தான் எடுக்காவிட்டால், தங்களுக்கு நடக்கும் கொடூரம் வெளி உலகிற்கு தெரியாமலேயே போயிருக்கும் என காஞ்சன் கூறி உள்ளார். (ஐ)

## பதவி பறிப்பு மசோதா ஜேபிசியில் பங்கேற்பு இல்லை ஆம் ஆத்மியும் புறக்கணிப்பு



பதவி பறிப்பு மசோதா குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்படும் நாடாளுமன்ற கூட்டு குழுவில் சேர மாட்டோம் என ஆம் ஆத்மி அறிவித்துள்ளது. பிரதமர், முதல்வர்கள் மற்றும் அமைச்சர்கள் 30 நாட்கள் காவலில் வைக்கப்பட்டால் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வகைசெய்யும் சர்ச்சைக்குரிய மசோதாக்களை ஆய்வு செய்வதற்கான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் (ஜேபிசி) பங்கேற்கப் போவதில்லை என திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடியும் அறிவித்திருந்தன.

இந்த நிலையில் தற்போது ஆம் ஆத்மியும் ஜேபிசி குழுவில் சேரப்போவது இல்லை என்று தெரிவித்துள்ளது.ஆம் ஆத்மி எம்பி சஞ்சய் சிங் பதிவிடுகையில்,ஊழல்வாதிகளின் தலைவர் எப்படி ஊழலுக்கு எதிரான மசோதாவை கொண்டு வர முடியும்? தலைவர்களை போலி வழக்குகளில் சிக்க வைத்து சிறையில் அடைப்பது, அரசாங்கங்களை வீழ்த்துவது இதுதான் இந்த மசோதாவின் நோக்கம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# போர்ஷியாவின் கத்தி!

–மருதன்

சில பெண்களை வரலாறு மிக உயர்வாக உயர்த்திப் பிடித்தியிருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். போர்ஷியா கடோனிஸ் அவர்களில் ஒருவர். பலமிக்க ரோமானியப் பெண்ணாகவும் தூய்மையான அன்பின் அடையாளமாகவும் போர்ஷியா பலரால் புகழப்படுகிறார். ஒவ்வொரு ரோமானியப் பெண்ணும் போர்ஷியாவை அடியொற்றி நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது .

புரூட்டஸின் இரண்டாவது மனைவி, போர்ஷியா. தன்னுடைய முதல் மனைவியான கிளாடியாவை எந்தவிதக் காரணமும் சொல்லாமல் விவாகரத்து செய்துவிட்டு இளம் பெண்ணான போர்ஷியாவை மணந்துகொண்டார் புரூட்டஸ். போர்ஷியா புரூட்டஸை உளமாற காதலித்தார். புரூட்டஸின் மனைவியாக இருப்பது பெருமைக்குரிய கௌரவம் என்றும் அவர் நினைத்தார். வாழ்நாளின் இறுதிவரை தன் கணவருக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்றும் அவர் உறுதிபூண்டார்.

ஜூலியஸ் சீஸருக்கு நெருக்கமானவராக இருந்தவர் புரூட்டஸ். சீஸரைக் கொல்ல அவர் சதித் திட்டம் தீட்டியது போர்ஷியாவுக்குத் தெரியுமா, தெரியாதா என்பதில் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. தன் கணவரின் திட்டத்தை ஆதரித்ததோடு நில்லாமல் அவருக்குத் தன்னாலான உதவிகளையும் போர்ஷியா செய்தார் என்கிறார்கள் ஒரு தரப்பினர்.

போர்ஷியாவிடம் புரூட்டஸ் தன் திட்டத்தைப் பகிர்ந்துகொண்டிருக்க வாய்ப்பேயில்லை என்கின்றனர் இன்னொரு தரப்பினர்.

புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் புளூடார்க் அளிக்கும் சித்திரம் வித்தியாசமானது. ஒரு நாள் போர்ஷியா தன் கணவரைக் காண்பதற்காக அவருடைய அறைக்குச் சென்றார். அங்கே புரூட்டஸ் கவலையும் குழப்பமும் தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

நீங்கள் எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருககிறீர்கள், ஏன் இப்படிச் சோர்வாக இருக்கிறீர்கள் என்று அவரிடம் விசாரித்தார். சீஸரை எப்படிக் கொல்வது என்பதைப் பற்றிதான் அப்போது புரூட்டஸ் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆனால், அதை அவர் தன் மனைவியிடம் பகிர்ந்துகொள்ளவில்லை. ஏதோ சாக்குபோக்கு சொல்லி போர்ஷியாவை அவர் திருப்பியனுப்பிவிட்டார்.

இது போர்ஷியாவைப் பாதித்தது. தன் ஆசை கணவர் ஏன் தன் மனநிலையை என்னுடன் பகிர்ந்துகொள்ள மறுக்கிறார்? நான் அப்படி என்ன தவறாகக் கேட்டுவிட்டேன்? ஒருவேளை ஏதேனும் அரசாங்க விவகாரமாக இருக்குமோ? இருந்தால்தான் என்ன? நான் அவர் மனைவிதானே? தன் மனதைப் பிசையும் விஷயம் என்ன என்பதை என்னுடன் அவர் பகிர்ந்துகொண்டிருக்கலாமே? என் உதவியை நாடாவிட்டாலும் தகவலாவது சொல்லியிருக்கலாமே. ஏன் செய்யவில்லை அவர்? அப்படியானால் என்னை அவர் இன்னும் பரிபூரணமாக நம்பவில்லையா? என் காதலை, தூய்மையான அன்பை அவர் சந்தேகிக்கிறாரா?

பிறகுதான் போர்ஷியாவுக்குக் காரணம் தெரிந்தது. புரூட்டஸ் ஏதோ ஒரு ரகசியமான திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறார். அதை ஒருவரிடமும் சொல்ல அவர் விரும்பவில்லை. காதல் மனைவிதான் என்றபோதும் ஒரு பெண் என்பதால் அவர் ரகசியத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயங்கியிருக்கிறார். நிச்சயம் அந்த ரகசியம் அரசாங்க அலுவல் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். ஆபத்தானதாகவும் இருக்கக்கூடும். போர்ஷியாவுக்கும் அந்த ரகசியம் தெரியும் என்னும் உண்மை வெளிவந்தாலும் அவரையும் அரசுப் படைகள் கைது செய்துவிடும். என்ன, ஏது என்று கேள்விகள் கேட்டும் சித்திரவதை செய்தும் துன்புறுத்தவும் செய்யும். பெண்களால் இத்தகைய வதைகளைப் பொறுத்துக்கொள்ளமுடியாது என்பதை ரோமானியர்கள் அறிவார்கள். அதனால்தான் புரூட்டஸ் அமைதி காத்திருக்கிறார்.

ஆம், இதுதான் உண்மையான காரணமாக இருக்கமுடியும் என்று நினைத்துக்கொண்டார் போர்ஷியா. அப்படியானால் இந்த நிலைமையை எப்படி மாற்றுவது? எப்படிப் புரூட்டஸின் நம்பிக்கையைப் பெறுவது? அதற்கோர் உபாயத்தைக் கண்டுபிடித்தார் போர்ஷியா. ரகசியம் காக்கத் தெரிந்திருக்கவேண்டுமானால் சித்திரவதைகளையும் தாங்கத் தெரிந்திருக்கவேண்டும். சவரம் செய்ய பயன்படும் கத்தியை கையில் எடுத்தார். தன் தொடையில் அந்தக் கத்தியை வைத்து கீறிக்கொண்டார். காயம் ஏற்படும்வரை அவர் ஓயவில்லை. வலித்தது. ஆனால், அந்த வலியைப் பொறுத்துக்கொள்ள அவர் கற்றுக்கொண்டார். வலியைத் தாண்டி உள்ளுக்குள் மகிழ்ச்சி படர்ந்தது. நம்பிக்கையும் துளிர்விட்டது. இனி என் கணவர் என்னை நம்புவார். நம்பியே தீருவார்.

பரிசோதனை வெற்றி என்றாலும் காய்ச்சல் கண்டுவிட்டது. ஒன்றிரண்டு நாள் எழுந்திருக்க முடியவில்லை. காய்ச்சல் அகன்றதும் துள்ளிக் குதித்து தன் கணவரிடம் ஓடிச்சென்றார் போர்ஷியா.

புளூடார்க்கின் வார்த்தைகளில் இனி போர்ஷியாவின் வசனத்தைக் காணலாம். ‘என் அன்புக்குரிய கணவரே, நீங்கள் என் உள்ளத்தை நேசித்தாலும், என் உள்ளத்தை நம்பினாலும் என் உடல் குறித்து உங்களுக்குச் சந்தேகம் நேர்ந்திருக்கலாம். அதில் பாதகம் எதுவுமில்லை. எனக்குமேகூட அந்தச் சந்தேகம் இருந்தது. இப்போது அது பறந்தோடிவிட்டது. ஆம், என் உடலை இப்போது நான் நம்புகிறேன். அது எல்லா வதைகளையும் தாங்கிக்கொள்ளும் என்று நம்புகிறேன். இனி அஞ்சவேண்டாம். எத்தனை சவுக்கடிகள் கொடுத்தாலும், நெருப்பில் வாட்டினாலும் ஒரு சொல்கூட என்னிடமிருந்து வராது. நீங்கள் என்னை இனி நம்பலாம். ஒருவேளை இப்போதும் நம்பவில்லையென்றால் நான் உயிர் வாழ்வதில் அர்த்தமேயில்லை.’

தன் மனைவியின் தொடையில் ஏற்பட்ட காயத்தைக் கண்டதும் புரூட்டஸ் மனம் மாறினார். தன்னுடைய சதி திட்டத்தை போர்ஷியாவிடம் பகிர்ந்துகொள்ள அவர் முடிவு செய்தார். ஆனால், அதற்குள் வேறு சில பணிகள் வந்துவிட்டதால் அவர் கிளம்பிவிட்டார். சீஸரைக் கொல்லும் திட்டம் நிறைவேறியது. ஆனால், போர்ஷியா நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தார். ஆபத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் தன் கணவன் பத்திரமாக வீடு திரும்பவேண்டும் என்பதே அவர் ஒரே கவலை. தன் திட்டத்தைப் பகிர்ந்துகொள்ள புரூட்டஸ/க்கு நேரம் கிடைக்காவிட்டாலும் அதை விவரிக்க அவர் தயாராக இருந்தார் என்பதே போர்ஷியாவுக்கு மனநிறைவை அளித்துவிட்டது.

இதற்கிடையில் புரூட்டஸ் சீஸரைக் கொன்ற கையோடு ஏதென்ஸ் தப்பிச்சென்றுவிட்டார். போர்ஷியா இத்தாலியில் இருப்பதுதான் அவருக்குப் பாதுகாப்பானது என்று சொல்லப்பட்டது. புரூட்டஸ் பாதுகாப்பாக இருக்கவேண்டுமே என்று நினைத்து நினைத்து வருந்தி மயங்கிச் சரிந்துகொண்டிருந்தார் போர்ஷியா. மயங்காதபோது வாய்விட்டுக் கதறி அழுதார். புரூட்டஸ் என்ன செய்தார், எதற்காகத் தப்பியோடினார் என்பது இப்போது ஊரறிந்த ரகசியமாகிவிட்டது. தன் கணவரை நிச்சயம் ரோமானியப் படைகள் பிடித்துக் கொன்றுவிடும் என்று போர்ஷியா அஞ்சத் தொடங்கினார். புரூட்டஸ் இல்லாத வாழ்க்கையை அவரால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. அவருக்காகவே வளர்க்கப்பட்ட இந்த உடலையும் உயிரையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன் என்று அரற்றினார். தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார்.

அதற்கு அவர் தேர்ந்தெடுத்தது வதையின் உச்சத்தை. காற்றுப் புகமுடியாத அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்ட போர்ஷியா தகித்துக்கொண்டிருந்த அடுப்புக் கரிகளை அள்ளி அள்ளி வாயில் போட்டு மென்று விழுங்க ஆரம்பித்தார். தொண்டை, வயிறு என்று தொடங்கி முழு உடலிலும் வெப்பம் பரவத் தொடங்கியது. மேலும் மேலும் கரித் துண்டுகளை அள்ளியெடுத்து விழுங்கிக்கொண்டே இருந்தார் போர்ஷியா. மரணம் அணைத்துக்கொள்ளும்வரை அவர் தன்னை வாட்டிக்கொண்டார்.

‘ஆகவே பெண்களே நீங்கள் போர்ஷியா போல் இருங்கள்’ என்று ஒவ்வொரு ரோமானியப்பெண்ணையும் பார்த்துச் சொன்னவர்கள் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்த்திருப்பார்கள் என்பதை யூகிப்பதில் சிரமம் இருக்கமுடியாது.



# ஏமன் மீது இஸ்ரேல் கடுமையாக தாக்குதல்..!!

ஏமன் தலைநகர் சனா மீது இஸ்ரேல் கடுமையாக தாக்குதல் நடத்தி வருவதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறி வைத்து ஏமன் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதாக தகவல் வெளியாகியது. (ஐ)

## ரயில் பாலம் இடிந்து 12 தொழிலாளர்கள் உயிரிழப்பு



சீனாவில் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருந்தபோது ரயில் பாலம் இடிந்து 12 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். கிங்ஸை மாகாணத்தில் மஞ்சள் ஆற்றின் மீது கட்டப்பட்டு வந்த பாலத்தின் இரும்பு கம்பி அறுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. பாலம் இடிந்து விழுந்ததில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில் 4 பேர் மாயமாகியுள்ளனர். (ஐ)

## அமெரிக்காவில் வீடற்று வாழும் பல்லாயிரம் பேருக்கு பசியாற்றும் பெண்



அமெரிக்காவில் நிகழும் பதற்றமான சூழல் நிலவும் வேளையில், இந்திய வம்சாவளிப் பெண் ஒருவர் தனது சமூக சமையலறை மூலம் பல்லாயிரக்கணக்கான வீடற்ற மக்களுக்கு உணவளித்து அன்பையும், நம்பிக்கையையும் விதைத்து வருகிறார். அமெரிக்க அதிபர் டிரம்ப், நாட்டில் நடக்கும் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சுமார் 2,000 தேசியப்படை வீரர்களைத் தலைநகர் வாஷிங்டனில் குவிக்க உத்தரவிட்டுள்ளார். ஆனால், குற்றங்கள் அதிகம் நடக்கும் பகுதிகளைக் கண்காணிக்காமல், மால் போன்ற பாதுகாப்பான சுற்றுலாத் தலங்களில் வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த பதற்றமான சூழலுக்கு மத்தியில், இந்திய வம்சாவளிப் பெண்ணான நுாபுர் பஞ்சாபியின் 'அன்னசுதா' சமூக சமையலறை, வர்ஜீனியாவில் ஒரு நம்பிக்கையின் ஒளி வீசுகிறது. வெற்றிகரமாக இயங்கி வந்த தனது தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை விட்டுவிட்டு, வீடற்ற மக்களுக்கு உணவளிக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துள்ளார் நுாபுர். சமஸ்கிருதத்தில் 'உணவும் அன்பின் அமிர்தமும்' என்று பொருள்படும் 'அன்னசுதா', 300 தன்னார்வலர்களின் உதவியுடன் மாதம் 6,500 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.

தனது தாயின் இழப்பு மற்றும் கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்திய மன உளைச்சலுக்குப் பிறகு, இந்தப் பணியைத் தொடங்கியதாகக் கூறும் நுாபுர், 'கோடீஸ்வரராக இல்லாதபோதிலும், இந்தப் பணியில் கிடைக்கும் மனநிறைவு வேறு எதிலும் இல்லை' என்கிறார். அமெரிக்காவின் ஒரு பகுதியில், ஆயுதம் தாங்கிய ராணுவ வீரர்கள் பளிங்குச் சின்னங்களுக்குக் காவலாக நிற்கிறார்கள். மறுபுறம், வர்ஜீனியாவில் தன்னார்வலர்கள் பசியால் வாடும் மக்களுக்கு அமைதியாக உணவு பரிமாறுகிறார்கள். சிக்கன் பாஸ்தா, சமோசா, பட்டர் சிக்கன் என இந்திய மற்றும் அமெரிக்க உணவு வகைகளை வழங்கி பலரின் பசியாற்றி வருகின்றனர். (ஐ)

## கூடுதல் வரி விதிப்புக்கு மத்தியில் இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதர் நியமனம்:



இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக தனது நெருங்கிய உதவியாளர் செர்ஜியோ கோரை அதிபர் டிரம்ப் நியமித்துள்ளார். இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக கடந்த 2023 மே மாதம் நியமிக்கப்பட்ட எரிக் கார்செட்டியின் பதவிக்காலம் கடந்த ஜனவரி மாதத்துடன் முடிவடைந்தது. இந்நிலையில், இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக செர்ஜியோ கோரை நியமிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் நேற்று அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக டிரம்ப் தனது சமூக ஊடக பதிவில், "38 வயதாகும் கோர் எனது சிறந்த நண்பர். பல ஆண்டுகள் என்னுடன் இணைந்து பயணிக்கிறார். எனவே, இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக செர்ஜியோ கோருக்கு பதவி உயர்வு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என கூறி உள்ளார். செர்ஜியோ கோர் தனது சமூக ஊடக பதிவில், "என் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக என்னை அறிவித்துள்ள அதிபர் டிரம்புக்கு மிகுந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என கூறி உள்ளார்.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் அதிகளவு வாங்குவதால் இந்தியாவுக்கு எதிராக டிரம்ப் கூடுதல் வரிகள் விதித்து வரும் நிலையில், செர்ஜியோ கோரின் நியமனம் கவனத்தை பெற்றுள்ளது. இவருக்கும் இந்தியாவுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லாத நிலையில் டிரம்ப் தனது தீவிர விசுவாசியை இந்திய தூதராக நியமித்துள்ளார்.

செர்ஜியோ கோர் உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்டில் பிறந்தவர். இவரது தாயார் இஸ்ரேல் நாட்டை பூர்வீகமாக கொண்டவர். செர்ஜியோ தற்போது வெள்ளை மாளிகையின் பணியாளர் அலுவலக இயக்குநராக பணியாற்றி வருகிறார். இவரது நியமனத்தை செனட் அவை ஏற்றுக் கொள்ளும் வரை இந்த பதவியில் அவர் நீடிப்பார்.

ஈரான் அணுசக்தி மையங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் குறித்து அதிபர் டிரம்ப் கூறியதற்கு எதிரான உளவுத்துறை மதிப்பீட்டை வெளியிட்ட ராணுவ உளவு அமைப்பின் தலைவர் ஜெப்ரி க்ரூஸ், கடற்படையின் ரிசர்வ் தலைவரான வைஸ் அட்மிரல் நான்சி லாகோர் மற்றும் கடற்படை சிறப்பு போர் கட்டளையை மேற்பார்வையிடும் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் மில்டன் சாண்ட்ஸ் ஆகியோரையும் ஹெக்சேத் பணிநீக்கம் செய்து உள்ளனர்.

அமெரிக்காவில் குடித்து விட்டு வாகனத்தை ஓட்டுபவர்களை உடனே நாடு கடத்தவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மசோதா இந்தியா உள்ளிட்ட புலம்பெயர்ந்த மக்களிடையே கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணியின் சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஆகியோருடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது அவர்கள் கூட்டாக மேலும் தெரிவிக்கையில், "இலங்கையில் பல்வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான மனிதப் புதைகுழிகள் வடக்கு, கிழக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது.

தற்போது செம்மணி மனிதப் புதைகுழிகளில் அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அதில் 140 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 90 வீதமானவை ஆடைகள் அற்ற நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குழந்தைகளின் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றுக்குச் சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரியும், சர்வதேச நிபுணர்களின் கண்காணிப்பில் அகழ்வுப் பணிகள் முன்னெக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. போராட்டத்தை வலுப்படுத்தப் பேதங்களற்ற வகையில் அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்து யாழ். ஊடக அமையத்தில் இன்று ஊடக சந்திப்பை ஏற்பாட்டுக் குழு நடத்தியது.

இந்தச் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அண்மையில் ஐ. நா. பிரதிநிதி யாழ். வந்து செம்மணியின் தடயங்களைப் பார்வையிட்டார். அவரது இந்தச் செயற்பாட்டை அடுத்து நீதிக்கான சமிக்ஞை கிடைக்கும் என்று நம்பினோம். ஆனால், அத்தனையும் கலைந்துவிட்டது.

ஐ.நாவின் பிரதிநிதி உள்ளகப் பொறிமுறையை எம்மிடம் திணித்துச் சென்றது போன்று அவரது கருத்து இருக்கின்றது.

நாம் சர்வதேச விசாரணையையே கோருகின்றோம். அதற்கான வலியுறுத்தலையே இன்றும் வலியுறுத்துகின்றோம்.

எனவே, எமக்கு உள்ளகப் பொறிமுறை வேண்டாம். அதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

இந்நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி செம்மணியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

மதத் தலைவர்கள், பல்கலைக்கழகச் சமூகம், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என அனைவரும் பேதங்களற்ற வகையில் ஒன்றுதிரண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்." - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தகர்கள், பொதுமக்களை ஒன்றிணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பருத்தித்துறை துறைமுகப் பகுதி மற்றும் வெளிச்ச வீட்டடியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்துக்குச் சொந்தமான நிலம் மற்றும் தபால் நிலையத்துக்குச் சொந்தமான கட்டடம் என்பவற்றை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் பெரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், தபால் நிலையம் பிறிதொரு கட்டடத்தில் இயங்கி வருவதுடன் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை பருத்தித்துறை நகருக்கு வெளியே இடமாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால், பருத்தித்துறை நகரின் முக்கிய அடையாளங்களான நீதிமன்றம், தபால் நிலையம், வெளிச்ச வீடு ஆகியவற்றை அந்தந்த இடங்களிலேயே உறுதிப்படுத்தும் வகையிலும், குறித்த பகுதிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றுமாறு கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# தபால் தொழிற்சங்கங்களின் பணிப் புறக்கணிப்பு நிறைவு

கொழும்பு, ஓக. 25

தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடனான கலந்துரையாடலில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைவாக கடந்த 7 நாட்களாக முன்னெடுத்து வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நிறைவுக்கு வந்தது என்று தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

19 கோரிக்கைகளை முன்வைத்து தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்கள் உட்பட பல தொழிற்சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால், இலட்சக்கணக்கான கடிதங்கள் தேங்கியுள்ளன என்றும் தெரியவருகின்றது.

# வித்யா கொலை வழக்கு குற்றவாளிகளின் மேன்முறையீடு- விசாரணை திகதி அறிவிப்பு!

புங்குடுத்தீவு மாணவி சிவலோகநாதன் வித்யா கடந்த 2015ஆம் ஆண்டு கடத்தப்பட்டு, கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி குறித்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உயர் நீதிமன்றம் இன்று (25) அறிவித்துள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் அபேகோன் ஆகிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன்னிலையில் இன்று அழைக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்ததுடன், வழக்கின் தமிழ் மொழி பெயர்ப்புகளைப் பெற நான்கரை ஆண்டுகள் வரை சென்றதாக சுட்டிக்காட்டினார்.

எனவே மேன்முறையீட்டு விசாரணைக்கு, குறுகியகால திகதி ஒன்றை வழங்குமாறு பிரதிவாதி சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரினார்.

அதற்கமைய, பிரதிவாதிகளின் மேன்முறையீடு தொடர்பான மனுவை எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.

2015 மார்ச் 3 ஆம் திகதி பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சந்தர்ப்பத்தில் புங்குடுத் தீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்யா என்ற 18 வயது பாடசாலை மாணவி கடத்தி, கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

தங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்திற்கு முரணானது என்றும், எனவே தங்களை இந்த வழக்கில் குற்றமற்றவர்கள் எனக் கருதி விடுவிக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, சட்டத்தரணிகள் ஊடாக பிரதிவாதிகள் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இருந்து முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள்– அரச தரப்பு தெரிவிப்பு!

ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் வடக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்தே முன்னெடுக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழுக்கு வருகை தந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க இளங்குமரன் ஆகியோருடன் கூட்டாக ஊடக சந்திப்பினை நடத்தி இருந்தார். இதன் போதே அவர் மேற்கினடாவாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அவை வடக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட வுள்ளது.

அதற்காக எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி, மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதனை தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் கடவுச்சீட்டு, அலுவலகத்தை திறந்து வைத்து, கடவுச்சீட்டு வழங்கும் பணிகளை ஆரம்பித்து வைப்பார்.

பின்னர் மயிலிட்டி துறைமுகத்திற்கு விஜயம் செய்து, துறைமுக அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் செய்து , நூலகத்தை பார்வையிடவுள்ளதுடன், சில நூல்களையும் அன்பளிப்பு செய்யவுள்ளார்.

மறுநாள் 02 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து, வட்டுவாகல் பால புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் தென்னை முக்கோண வலய செயற்திட்டத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

எமது அரசாங்கம் வடக்கு - கிழக்கை முன்னிலைப்படுத்தி வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தற்போது நாட்டின் வருமானம் அதிகரித்து உள்ளது. அதனால் எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் அபிவிருத்திக்காக அதிகளவான நிதிகளை ஒதுக்கீடு செய்யப்படும். அதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தியே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலை பளை, இத்தாவில் சந்தியில் இடம்பெற்றது.

புலோப்பளை கிழக்கைச் சேர்ந்த அருள்நேசராசா பிரின்லஸ் (வயது 50) என்பவர் பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார்.

இன்று காலை கடமைக்காக ஏ - 9 வீதியில் வந்து பாடசாலைக்குச் செல்வதற்காக வீதியின் மறுகரைக்குத் திரும்பிய வேளையில் அதே மார்க்கத்தில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஆசிரியை படுகாயமடைந்தார்.

அவர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். முகம் மற்றும் பல், பெருவிரல் ஆகியவற்றில் பலத்த காயம் ஏற்பட்டதால் அவர் மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கான பதில் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்பட்டனர். நீண்ட நேரமாக சிகிச்சை வழங்கப்படாமையால் நோயாளர்கள் பெரும் அவதி அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது,

இன்று காலை 6.30 மணியளவில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த வயோதிபர்கள் இருவருக்கும், அந்த வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவருக்கும் அந்தப் பகுதியில் இருந்த குளவிக்கூடு ஒன்று கலைந்து அதிலிருந்த குளவிகள் கொட்டியுள்ளன.

உடனடியாக உறவினர்களால் மூவரும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் இருக்கின்றனர் என்று கூறி நீண்ட நேரம் அவர்கள் பார்வையிடப்படவில்லை என்று நோயாளர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகிய மூவர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிக்கிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு நீண்ட நேர காத்திருப்பின் பின்னர் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்கள் அல்லது தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பாக இருப்பினும் அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளர்களையாவது உடனடியாக மருத்துவமனைக்குள் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டும் என நோயாளர்கள் இதன்போது தெரிவித்திருந்தனர்.

அத்தோடு இன்னும் பல நோயாளர்கள் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்த பின்னரே சிகிச்சை பெற்றுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், அந்தப்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2025 வெளியிடப்பெற்றது.